இவை ஏற்பட்டுவிடாது. ஆங்காங்கு ஏற்படும் வெள்ளச் சேதமானாலும், வறட்சி நிவாரணப் பணியானாலும், அவற்றுக்கு அந்தந்தத் துறை அல்லது மாவட்ட அளவில் அல்லது மாநில அளவில் அதற்குப் பொறுப்பு ஏற்றுக் கொண்டிருக்கிறவர்கள் உடனடியாக கவனிக்கவேண்டிய பணியைப் பற்றி ஆராய வேண்டும். அதற்கு குழுக்கள் இயங்கி வருகின்றன.

திரு. குமரி அனந்தன்: மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, சிறு மழை பெய்தால்கூட வெள்ளப் பெருக்கு ஏற்பட்டுவிடுகிறது. அதற்குக் காரணம் குளங்களும், ஏரிகளும் ஆக்கிரமிக்கப்படுவதாலும், தூர் எடுக்கப்படாததாலும் என்று நினைக்கிறேன். ஆக்கிரமிப்புக்களைத் தடுக்க அதிகாரம் பெற்றிருக்கிற இலாக்காக்கள் அதைச்செய்து நடவடிக்கை எடுக்க உத்திரவிட்டாலேயே வெள்ளச் சேதத்தை தடுத்துவிடலாமென்று கருதுகிறேன். அதற்கு அரசு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, நீர்ப்பாசனத் துறையின் சார்பாக குளங்கள், ஏரிகள், வாய்க்கால்கள் ஆகியவற்றில் தூர் வாருகின்ற சூழ்நிலைகள் இருக்கின்றன. சில சமயங்களில் தண்ணீரைக் கொண்டு வந்து சேர்க்கும் கால்வாய்களையே ஆக்கிரமித்துக் கொண்டு, அவற்றிலேயே வீடுகள் கட்டிக்கொண்டு குளத்திற்கும், ஏரிக்கும் தண்ணீர் வராமல் செய்துவிடுகிறார்கள். மேலும் குளங்கள், ஏரிகள் வறண்டு போகின்ற நேரங்களில் அந்த புறம்போக்கு நிலங்களை ஆக்கிரமித்துக்கொள்ளும் சூழ்நிலையும் ஏற்படுகிறது. இவற்றைத் தடுக்க கடுமையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். நீர்ப்பாசனத்திற்கு இல்லாவிட்டாலுங்கூட, அவற்றைச் சுற்றியுள்ள கிணறுகளில் குடி தண்ணீருக்காக நீர் ஊற்றுகள் ஏற்பட வேண்டுமென்றால் ஏரிகள், குளங்களில் தண்ணீர் தேங்கியிருக்க வேண்டும். அந்த அடிப்படையில் திட்டமிட்டு, மாவட்டங்களைப் பொறுத்த வரையில், 'பேஸ்டு ப்ரோக்ராம்' என்ற அடிப்படையில் தூர் வாரும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

உசிலம்பட்டி பேரூராட்சியை நகராட்சியாக மாற்றல்.

146—(*வினா எண். 4399) திரு. பி. கே. எம். முத்துராமலிங்கம் : மாண்புமிகு உள்ளாட்சி மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

உசிலம்பட்டி தேர்வுநிலைப் பேரூராட்சியை நகராட்சியாக மாற்றும் திட்டம் தற்போது எந்த நிலையில் உள்ளது?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உசிலம்பட்டி தேர்வுநிலை பேரூராட்சியை நகராட்சியாக மாற்றுவது சம்பந்தமாக உசிலம்பட்டி பேரூராட்சி மன்றத்தின் பரிசீலனைக்கு வைக்கப்பட்டதில் அம்மன்றம் 11—7—86-ம் தேதிய 77-வது தீர்மானத்தில் தொடர்ந்து பேரூராட்சியாகவே இருக்கட்டும் என தீர்மானித்துள்ளது.

1986 நவம்பர் 24]

திரு. பி. கே. எம். முத்துராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, உசிலம்பட்டி பேரூராட்சியை நகராட்சியாக மாற்ற வேண்டுமென்று பல ஆண்டுகளாகச் சொல்லப்படுகிறது. அதன் மூலமாக அந்த நகரத்தின் அபிவிருத்தி ஏற்பட்டு, அந்தப் பகுதி முன்னேறுவதற்கு வாய்ப்பு இருக்கிறது என்று பல ஆண்டுகளாகச் சொல்லப்பட்டு வருகிறது. இதற்கிடையிலே மாண்புமிகு அமைச்சரவர்கள் சொன்னது போன்று ஒரு தீர்மானத்தை நிறைவேற்றியிருக்கிறார்கள். அந்தப் பேரூராட்சி நகராட்சியாக மாற்றப்பட்டால், அந்தப் பகுதி முன்னேறும் என்று அங்கேயிருக்கும் வியாபாரப் பெருமக்கள் நினைத்துக்கொண்டிருக்கிறார்கள். எனவே இது பற்றி அரசு அறிவுறுத்துமா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, ஒரு பேரூராட்சி நகராட்சியாக மாற்றப்பட வேண்டுமென்றால் அதற்கென்று 'பைனான்சியல் நார்ம்ஸ்'—நிதிநிலைமை பற்றிய வரைமுறைகள் உள்ளன. வருவாய் 5 இலட்சம் ரூபாய் இருந்தால்தான் அந்தப் பேரூராட்சி மூன்றாம் நிலை நகராட்சியாக உயர்த்தப்படும். அந்த 'பைனான்சியல் நார்மஸ்' உசிலம்பட்டியில் இருக்கிறதா என்று அரசு ஆராய்ந்து கொண்டிருக்கிறது. பிறகு நல்ல முடிவு எடுக்கும்.

சென்னை புறநகர் பேருந்து நிலையம்

147—(*வினா எண். 4454) திரு. எஸ். பி. மணவாளன் : மாண்புமிகு உள்ளாட்சி மற்றும் தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை எஸ்பிளனேட்டில் உள்ள புறநகர் பேருந்து நிலையத்தை இடநெருக்கடி காரணமாக வேறு இடத்திற்கு மாற்றும் திட்டம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், திட்டம் எப்போது செயல்படுத்தப்படும்?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) இல்லை. (ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. எஸ். பி. மணவாளன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, சென்னை நகரத்தில் இருக்கின்ற புறநகர் பேருந்து நிலையம் மிகவும் சுகாதாரச் சீர்கேடு நிறைந்திருக்கிறது. அங்கே பஸ்கள் நிற்க இட நெருக்கடி இருக்கிறது. மேலும் பயணிகள் தங்க ஓய்விடங்கள் இல்லாமல், பொது மக்கள் மிகவும் அவதிப்படுகிறார்கள். தலைநகரில் இப்படி ஒரு பேருந்து நிலையமா என்று நினைக்கும் அளவுக்கு அந்தப் பேருந்து நிலையம் இருக்கிறது. தன் தொகுதி மக்களின் நலன் கருதி தினமும் தொகுதியை வலம் வரும் மாண்புமிகு அமைச்சரவர்கள், இந்தத் தலைநகருக்கு வரும் மக்களின் நலன் கருதி, அந்தப் பேருந்து நிலையத்திற்கு திடீர் விஜயம் செய்து, அந்தப் பேருந்து நிலையத்தை விரிவான ஒரு இடத்திற்கு மாற்றும் திட்டத்தை விரைவாக பரிசீலிப்பார்களா ?

(முற்பகல்-9.10)

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அப்படி மாற்றுவது என்றாலும் இடப் பிரச்சினையுடன் பல பிரச்சினைகள் இருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன உணர்வுகளை வைத்துக் கொண்டு என்ன செய்ய முடியுமோ அவைகளைச் செய்ய அரசு சித்தமாக இருக்கிறது.

திரு. எஸ். பி. மணவாளன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னைக்கு அருகிலுள்ள கம்மம்பட்டி என்ற பகுதியிலே இந்தப் பேருந்து நிலையத்தை மாற்றுவதற்கு ஒரு உத்தேசம் இருப்பதாகக் கேள்விப்பட்டேன். இந்தத் திட்டம் நடைமுறைப்படுத்தப்படுமா அல்லது இந்த திட்டத்தை கைவிட்டு விட்டார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, அது பற்றிய தகவல் இல்லை. தனிக் கேள்வி போடவும்.

ஊராட்சி ஒன்றியங்களில் வசூலிக்கப்படும் உள்ளூர் மேல்வரி.

148—(*வினா எண். 8027) திரு. எஸ். என். இராமசாமி : மாண்புமிகு உள்ளாட்சி மற்றும் தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கல்விப் பொறுப்பை அரசே ஏற்றுக்கொண்டு விட்டதால் ஊராட்சி ஒன்றியங்களில் கல்விக்காக வசூலிக்கப்படும் லோக்கல் சர்சார்ஜ் வசூலிப்பதைக் கைவிடச் செய்யும் திட்டம் ஏதும் உள்ளதா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இல்லை.

திரு குமரி அனந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, அரசு கல்விப் பொறுப்பை ஏற்றுக்கொண்டதற்குப் பின்னால் இப்படிப்பட்ட ஊராட்சிப் பகுதிகளிலே பல்வேறு இடங்களிலே ஆசிரியர்கள் நியமிக்கப்படாமலும், ஒரு இடத்திலிருந்து இன்னொரு இடத்திற்கு மாற்றும்போது அந்த இடம் இட்டு நிரப்பாமலும் இருந்து கொண்டிருக்கின்ற நிலையில் சர்சார்ஜ் நியாயமானதாக இருக்கின்றதா என்பதை அரசு மீண்டும் பரிசீலிக்குமா ? இப்படிப்பட்ட குறைகளை தவிர்க்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கவனத்திற்கு கொண்டுவர விரும்புகிறேன், இந்த லோகல் சர்சார்ஜ் என்பது கல்விக்காக மட்டுமல்ல. பொது நிதிக்காக வசூலிக்கப்படுகின்றது. கல்விக்கும் இதிலிருந்து செலவு செய்யப்படுகிறது.